TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109704

1. District மாவட்டம் : நீலகிரி  PS: காவல்நிலையம் ஊ.த.க பிரிவு  Year: ஆண்டு 2023  FIR No.: மு.த.அ. எண் 01  Date: நாள் 30.01.2023

2. (i) Act சட்டம்: pc Act 1988 as amended by PC(Amendment) Act 2018  Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் டிசம்பர் 2022  Date to : நாள் வரை 30.01.2023
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் –  Time to : நேரம் வரை –
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.01.2023  Time : நேரம் 11.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்  சுமார் 50 km மேற்கே
Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி கூடலூர் நகராட்சி அலுவலகம், கூடலூர்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : – District : –
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. மணிகண்டன்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S. ராஜேந்திரன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –
Date of Issue : வழங்கப்பட்ட நாள் –  Place of Issue : வழங்கப்பட்ட இடம் –
(f) Occupation : தொழில் விவசாயம்  (g) Address : முகவரி No. 3/161-C, தொரப்பள்ளி, கூடலூர் நீலகிரி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. ப்ரீவித், பில் கலெக்டர், கூடலூர் நகராட்சி அலுவலகம், கூடலூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: தாமதம் இல்லை.
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 30/01/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 30/1/23
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 30·01·2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ............................... [handwritten name]
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் ஆய்வாளர்
ஊ.நக பிரிவு, நீலகிரி மாவட்டம்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

<u>நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/2023/AC/NI u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் விவரம்;-</u>

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

30.01.2023-ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலக அலுவலில் இருந்த போது நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுக்கா, தொரப்பள்ளி, கதவு எண்.3/161 C-ஐ சேர்ந்த திரு.மணிகண்டன் என்பவர் அலுவலகம் வந்தார். அவரை அலுவலகத்திற்குள் அழைத்து அவர் வைத்திருந்த புகார் மனுவை பெற்றேன். அந்த புகார் மனுவானது கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. நான் அந்த புகார் மனுவை படித்து பார்த்து, புகார் சம்மந்தமாக புகார்தாரரிடம் விசாரித்தும், எதிரியின் நடத்தை குறித்து ரகசிய விசாரணை மேற்கொண்டதில், எதிரியானவர் அரசு பணி செய்வதற்கு லஞ்சம் வாங்குபவர் என்றும், கூடலூர் நகராட்சி அலுவலகத்தில் வருவாய் உதவியாளராகவும், புதியதாக கட்டிய வீடுகளுக்கு வரி விதிக்க கோரும் பொதுமக்களிடமும், புதியதாக வீடு கட்ட அங்கீகாரம் பெறும் பொதுமக்களிடமும் மற்றும் நகராட்சி அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் தனிநபர்களை வைத்து அவர்கள் மூலம் லஞ்சமாக பணம் கேட்டு பெறுவதாகவும் தெரியவருகிறது. மேலும் புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் தெரியவந்தது. மேலும் புகாரின் உண்மைதன்மையயும், நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்தும் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 30.01.2023-ம் தேதி 12.00 மணிக்கு உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு

தொடர்ச்சி-2 ஆம் பக்கம்

Angayarkanni 30/1/23

பிரிவு குற்ற எண்.1/2023/AC/NI-ல் ஊழல் தடுப்பு சட்ட பிரிவு 7-ன் படி, மேற்படி எதிரி திரு.ஸ்ரீஜித், வருவாய் உதவியாளர், கூடலூர் நகராட்சி அலுவலகம், கூடலூர், நீலகிரி மாவட்டம் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு:- 30.01.2023 அனுப்புநர் R.மணிகண்டன், த/பெ S.ராஜேந்திரன், 3/161-C, தொரப்பள்ளி, கூடலூர், நீலகிரி மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, ஊட்டி, நீலகிரி மாவட்டம். ஐயா, நான் நீலகிரி மாவட்டம், கூடலூர், தொரப்பள்ளி, கதவு எண்.3/161-C-ல் எனது பெற்றோர் மற்றும் என் அண்ணனுடன் வசித்து வருகிறேன். எனது அப்பாவிற்கு தற்பொழுது சுமார் 60 வயது ஆகின்றது. நாங்கள் விவசாயம் செய்து வருகிறோம். எனது அப்பா திரு.ராஜேந்திரன் அவர்களுக்கு நீலகிரி மாவட்டம், கூடலூர், தொரப்பள்ளியில், தற்பொழுது வார்டு எண்.10 சர்வே எண்.774/2, 773/2-ல் சுமார் 94 சென்ட் நிலம் உள்ளது. அந்த நிலத்தில் ஏற்கனவே கதவு எண்.17/54 கொண்ட பழைய கூரை வீடு இருந்து இடிந்து விட்டது. பின்னர் அந்த இடத்திற்கு அருகில் வீடு கட்ட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் அதிகாரிகளை தொடர்பு கொண்டு மத்திய அரசின் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கான்கீரிட் தளம் போட்ட வீடு கட்ட எனது அப்பா திரு.ராஜேந்திரன் அவர்களின் பெயரில் மனு அளித்தேன். அதன்படி தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், கோயம்புத்தூர் கோட்டம் நிர்வாகப் பொறியாளர் அவர்களின் செயல்முறை (117/1-2021) நடப்பு கட்டு எண்.727/உ.பொ(தி)/2018 நாள்:18.01.2021-ன் படி அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தில் அரசு மானியம் பெற்று சுயமாக வீடு கட்டுதல் திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டு எனது அப்பா திரு.ராஜேந்திரன் அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. அதன்படி எனது அப்பா சுமார் 650 சதுர அடியில் முழுமையாக வீட்டை கட்டி முடித்து அதற்குண்டான அரசின் மானியத்தொகையை நான்கு தவணைகளில் மொத்தம் 2,10,000/- ரூபாய் பெற்றார். பின்னர் எனது அப்பா பெயரில் கட்டிய அந்த வீட்டிற்கு வரி விதிக்கக் கோரி கடந்த 21.09.2021 ஆம் தேதி கூடலூர் நகராட்சி

தொடர்ச்சி-3 ஆம் பக்கம்

Sreejith? [signature] 30/1/23

அலுவலகத்திற்கு சென்று சொத்துவரி விதிப்பு கோரும் விண்ணப்பத்தையும் அதற்கான கட்டணம் ரூ.100/-ஐயும் செலுத்தி ஒப்புகை சீட்டு பெற்றுக்கொண்டேன். அதன்பிறகு சில நாட்கள் கழித்து கூடலூர் நகராட்சி அலுவலக பில் கலெக்டர் திரு.ஸ்ரீஜித் அவர்கள் நாங்கள் கட்டிய வீட்டிற்கு புதிய வரிவிதிப்பு செய்ய புதிய வீடு கட்டிய இடத்திற்கு வந்து வீட்டினை அளந்து பார்த்துவிட்டு கூடலூர் நகராட்சி அலுவலகத்திற்கு வருமாறு கூறிவிட்டு சென்றுவிட்டார். எனக்கு சொந்த வேலை இருந்ததாலும், கர்நாடகா மாநிலம் பண்டிப்பூரில் விவசாயம் செய்து வந்ததாலும், கூடலூர் நகராட்சி அலுவலகம் செல்லாமல் இருந்ததால் எனது மனுவினை தள்ளுபடி செய்துவிட்டார். அதன்பிறகு மீண்டும் கடந்த 2022-ம் வருடம் அக்டோபர் மாதம் மறுபடியும் கூடலூர் நகராட்சி அலுவலகத்திற்கு சென்று சொத்துவரி விதிப்பு கோரும் விண்ணப்பத்தையும் அதற்கான கட்டணம் ரூ.100/-ஐயும் செலுத்தி ஒப்புதல் சீட்டு பெற்றுக்கொண்டேன். அதன்பிறகு கூடலூர் நகராட்சி அலுவலர்கள் எனது வீட்டிற்கு வருவார்கள் என்று காத்திருந்தேன். ஆனால் யாரும் வரவில்லை. பின்னர் நான் கடந்த 2022-ம் வருடம் டிசம்பர் மாதத்தில் ஒருநாள் மாலை கூடலூர் நகராட்சி அலுவலகத்திற்கு சென்று பில் கலெக்டர் திரு.ஸ்ரீஜித் அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் புதிதாக வரிவிதிப்பு செய்ய ரூ.19,000/- செலவாகும் என்று கூறினார். அதற்கு நான் அவரிடம் அரசு திட்டத்தில் தான் வீடு கட்டியுள்ளேன், அவ்வளவு செலவாகுமா என்று கேட்டேன். அதற்கு அவர் அரசு திட்டத்தில் இல்லாமல் தனிப்பட்ட முறையில் கட்டிய வீடுகளுக்கு வரிவிதிப்பு செய்ய எவ்வளவு செலவாகும் தெரியுமா என்று கூறினார். அப்பொழுது நான் அவரிடம் சார் நாங்கள் விவசாயம் தான் செய்து வருகிறோம், அவ்வளவு பணம் ரெடி பண்ண முடியாது என்று கூறினேன். அதற்கு அவர் இறுதியாக ரூ.14,000/- கொடுத்தால்தான் புதியதாக கட்டிய வீட்டிற்கு வரி விதிப்பு செய்ய முடியும் என்று கூறினார். ஆனால் என்னால் பணத்தை ரெடி செய்ய முடியவில்லை. பின்னர் நான் 23.01.2023 மாலை சுமார் 6.00 மணியளவில் கூடலூர் நகராட்சி அலுவலகம் சென்று திரு.ஸ்ரீஜித் அவர்களை பார்த்தேன். அப்பொழுது அவர்

தொடர்ச்சி-4 ஆம் பக்கம்

30/1/23

என்னிடம் லஞ்சப்பணம் ரூ.14,000/-ஐ கொண்டு வந்தாயா என்று கேட்டார். நான் அவ்வளவு பணம் ரெடி பண்ண முடியவில்லை என்று கூறினேன். அதற்கு அவர் அருகில் இருந்த ரமேஷிடம் எவ்வளவு பணம் வாங்கலாம் என்று கேட்டார். அதற்கு ரமேஷ் என்பவர் கால்குலேட்டரில் கணக்கு போட்டு ரூ.12,000/- என்று கூறினார். பின்னர் திரு.ஸ்ரீஜித் அவர்கள் என்னிடம் புதியதாக கட்டிய வீட்டிற்கு வரிவிதிப்பு செய்து தர லஞ்சமாக ரூ.12,000/-ஐ கொடுத்தால்தான் வரிவிதிப்பு செய்யமுடியும் என்று கண்டிப்புடன் கூறினார். அதன்பிற்கு நான் பணத்தை ரெடி செய்துவிட்டு பணத்துடன் வந்து பார்க்கிறேன் என்று கூறி அங்கிருந்து சென்றுவிட்டேன். ஆனால் 25.01.2023 ஆம் தேதி என்னால் திரு.ஸ்ரீஜித் அவர்களை பார்க்க கூடலூர் நகராட்சி அலுவலகம் போகமுடியாத காரணத்தினால் எனது செல்போனில் திரு.ஸ்ரீஜித் அவர்களை தொடர்பு கொண்டபோது திரு.ஸ்ரீஜித் அவர்கள் என்னிடம் ஏன் இன்று வரவில்லை என்றும் பணம் ரெடியாகிவிட்டதா என்றும் கேட்டார். அதற்கு நான் 25.01.2023 ஆம் தேதி எனது மகளின் காதணி விழா இருந்ததாலும், கர்நாடகா மாநிலம் பண்டிப்பூரில் விவசாயம் செய்து வருவதால் அவசரமாக அங்கு சென்றுவிட்டதால் என்னால் வரமுடியவில்லை என்றும், பணத்தையும் ரெடி செய்ய முடியவில்லை என்றும் கூறினேன். அதற்கு அவர் கடைசியாக ரூ.1000/-ஐ குறைத்து ரூ.11,000/-ம் பணத்தை இன்று (30.01.2023) கொடுத்தால்தான் வரிவிதிப்பு செய்து தருவதாகவும், இல்லையென்றால் எனது கோரிக்கையை ரத்து செய்துவிடுவதாக கண்டிப்புடன் கூறி செல்போனை துண்டித்துவிட்டார். நான் எனது வீட்டிற்கு வந்து யோசித்து புதியதாக கட்டிய வீட்டிற்கு வரிவிதிப்பு தொடர்பான வேலையை செய்ய ரூ.11,000/-ஐ லஞ்சமாக கேட்கும் கூடலூர் நகராட்சி அலுவலக பில் கலெக்டர் திரு.ஸ்ரீஜித் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க புகார் அளிக்க முடிவு செய்து அவர் கேட்ட பணம் ரூ.11,000/-ஐ ரெடி செய்து இன்று (30.01.2023) காலை எனது அப்பா பெயரில் புதியதாக கட்டிய வீட்டிற்கு வரி விதிப்பு மனுவை பரிந்துரை செய்ய லஞ்சம் கேட்கும் கூடலூர் நகராட்சி அலுவலக பில் கலெக்டர் திரு.ஸ்ரீஜித் மீது புகார் அளிக்கிறேன்.

தொடர்ச்சி-5 ஆம் பக்கம்

30/1/23

அவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள ஒப்பம் (XXXX) 30.01.2023 R.மணிகண்டன்). Submitted: Received the above complaint on 30.01.2023 at 11.00 hrs and after conducting a preliminary enquiry, registered a case in V & AC, The Nilgiris Cr.No.1/2023 u/s 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 on 30.01.2023 at 12.00 hrs. Sd (XXXX) 30.01.2023 Inspr. VAC, The Nilgiris. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் நீதிபதி, சிறப்பு நீதிமன்றம், உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பிவைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

30/1/23

மா. ஜோதிலட்சுமி
காவல் ஆய்வாளர்
ஊ.த.க. பிரிவு
நீலகிரி மாவட்டம்.